அமரகோசம்

ஏழாம் தொகுதி



S.18438

...சுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 561

ஸ்ரீ:

॥ अमरकोशम् ॥

அமரகோசம்

ஏழாம் தொகுதி

(மூன்றாம் காண்டத்தில் – மூன்றாம் பகுதி)

(நிறைவுப் பகுதி)

பதிப்பாசிரியர்:

என். ஸ்ரீநிவாசன்,

சம்ஸ்க்ருத பண்டிதர் (ஓய்வு)

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

மற்றும்

ஆய்வு மையம்

தஞ்சாவூர்

2015 விலை : ரூ. 150-00

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	அமரகோசம்-ஏழாம் தொகுதி
பதிப்பாசிரியர்	:	என். ஸ்ரீநிவாசன்,
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.
வெளியீட்டு எண்.	:	561
மொழி	:	சம்ஸ்க்ருதம் & தமிழ்
பதிப்பு	:	முதற் பதிப்பு
வெளியீட்டு நாள்	:	2015
தாள்	:	TNPL 18.6 கி. கி
நூல் அளவு	:	21 x 14 செ. மீ.
பக்கங்கள்	:	148
படிகள்	:	500
எழுத்து	:	16 & 12 புள்ளி
அச்சிட்டோர்	:	ஒளி அச்சுக்கோப்பு மற்றும் ஒளி அச்சு, சரசுவதி மகால் நூலகம்.
புத்தகக்கட்டு	:	லேமினேசன் அட்டை
பொருள்	:	நிகண்டு
விலை	:	ரூ. 150-00

வெளியீட்டாளர் முகவுரை

தஞ்சையில் அமைந்து தரணி முழுமைக்கும் அறிவுச் செல்வமாகப் பயன்பட்டுக்கொண்டிருக்கும் அரும்பெரும் நிறுவனம் சரசுவதி மகால் நூலகமாகும். சுவடிக் கருவூலமாகவும், பன்மொழி நூற்களஞ்சியமாகவும், பன்மொழி ஆய்வு மையமாகவும் திகழும் சரசுவதி மகால் நூலகம் ஆற்றிவரும் தொண்டு அளப்பரியது. அதன்கண் அமைந்துள்ள அரிய சுவடிகளை நூல்களாக சிறப்பான முறையில் பதிப்பித்து வெளியிட்டு வருகின்றது. அவ்வரிசையில் அமரகோசம் ஏழாம் தொகுதி என்னும் இந்நூல் தற்பொழுது வெளியிடப்படுகிறது.

இந்நூல் ஜைன மதத்தைச்சார்ந்த அமரசிம்மன் என்பவரால் எழுதப்பட்டது. இது மூன்று காண்டங்கள் கொண்டதாகும். இதுவரை இரண்டுகாண்டங்கள் முழுமையாகவும், மூன்றாவது காண்டத்தில் இரு பகுதியும் வெளிவந்துள்ளது. அதன் தொடர்ச்சியாக ஏழாம் தொகுதி (நிறைவு தொகுதி) தற்பொழுது வெளிவருகிறது.

அமரகோசம் பல்வேறு நாடுகளில் பல்வேறு மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. இத்துடன் பல்வேறு இந்திய மொழிகளிலும் இந்த நூல் மொழியாக்கத்துடன் வெளிவந்துள்ளன. இந்த நூலகத்தின் வாயிலாக வெளிவரும் சம்ஸ்கிருதப் பிரிவின் சார்பில் இந்த அமரகோசமே முதன்முதலாக கோசம் என்ற பிரிவில் வெளிவருகிறது என்ற செய்தியும் குறிப்பிடத்தக்கது. இந்நூலின் தமிழ் குறிப்புரைக்கு 'அமர கல்ப வல்லி' என்று பெயரிடப்பட்டுள்ளது.

காரணம் தேவையான பொருள் மட்டுமே கொடுக்கப் பட்டுள்ளது. வேறு உரையாசிரியருடன் பொருள் வேறுபடுமாயின் தேவையான குறிப்பு மட்டுமே கொடுக்கப்பட்டும், பாடவேறுபாடுகளும் சுட்டப் பட்டுள்ளன.

இந்நூலை சிறப்பாக பதிப்பித்த இந்நூலக முன்னாள் சம்ஸ்க்ருதப் பண்டிதர் திரு. என். ஸ்ரீநிவாசன் அவர்களுக்கு என் பாராட்டுக்கள்

இந்நூல் வெளிவரத் தேவையான நிதியுதவி நல்கிய அரசுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் நன்கு வெளிவர ஆவன செய்துள்ள சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் (பொ.) திரு. ம. சங்கரநாராயணன், B.A., அவர்களுக்கும், நூலகர் முனைவர் எஸ். சுதர்ஷன், M.A.,B.Lit.,M.L.I.S.Ph.D., அவர்களுக்கும் மற்றும் நூலகப்பணியாளர்களுக்கும் எனது பாராட்டுதல் களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சம்ஸ்க்ருத ஆர்வலர்களுக்கும், மாணவர் களுக்கும், ஆய்வாளர்களுக்கும் இந்நூல் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பது திண்ணம்.

தஞ்சாவூர்
09-02-2015

டாக்டர் என். சுப்பையன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

முகவுரை

வேதம் மிகத்தொன்மை வாய்ந்தது. இந்த வேதம் நான்காகப் பிரிக்கப்பட்டு ருக்-யஜுஸ்-ஸாமம்-அதர்வணம் என்று பெயரிடப்பட்டன. இவற்றுக்கு அங்கங்கள் ஆறு. அவையாவன. 1. शिक्षा, 2. व्याकरण, 3. छन्दः, 4. निरुक्त, 5. ज्योतिष, 6. कल्प.

1. சிக்ஷா-வேதங்களை உச்சரிக்கும்போது அதன் ஸ்வரங்களின் அளவுகளையும், எழுத்தின் மாத்திரைகளையும் கூறும். (शीक्षां व्याख्यास्यामः वर्णस्वरः। मात्रा बलम् । साम सन्तानः ।)

2. வ்யாகரணம்- இலக்கணம்.

3. சந்த: -யாப்பு

4. நிருத்தம் - சொற்பொருள். அதாவது வேதங்களில் காணப்படும் சொற்களின் விளக்கங்களும் மற்றும் அச்சொற்களின் தொகுப்பும். (இதுவே நிகண்டுகள் தோன்றக் காரணமாகும்) (இதனை பின்னர் விளக்கமாகக் காணலாம்)

5. ஜ்யோதிஷம் - யாகங்களை இன்னின்ன காலத்தில் செய்யவேண்டும் என்ற விதியைப் பின்பற்ற வேண்டுமாயின் உரிய காலத்தை அறிய வேண்டுமல்லவா ? ஆகவே உரிய காலங்களை அறிய உதவ ஏற்பட்டதாகும்.

5. கல்பம் - யாகங்களில் செய்யும் சடங்குகளில் இன்னின்ன காலத்தில் - இன்னின்ன மந்திரங்களைக் கூற வேண்டும் என்ற விதிகளைக் கூறுவது.

ஆக, வேதங்களின் ஆறு அங்கங்களே ஸம்ஸ்க்ருத மொழி வளர்ச்சிக்கு வித்தாகும்.

நிருக்தமும் அதன் வளர்ச்சியும் :

வேதங்களில் வரும் சொற்களைத் தொகுத்தும், அவற்றின் பொருளை **உறுதிபடத் தெரிந்து** கொள்வதற்காகவும் அமைந்ததொரு தொகுதியே நிருக்தமாகும். இதனை நிகண்டு என்ற சுட்டுச் சொல்லால் அமைத்துள்ளார் **'யாஸ்கர்'** என்ற **முனிவர்.** இதனை तम् –इमम् –समाम्नायं निघण्टवः इत्याचक्षते முதலில் வைதீகச் சொற்களின் தொகுப்பே நிகண்டு எனப்பட்டது. அதாவது வேதங்களில் பயிலப்படும் பசு முதல் தேவ பத்னி வரையுள்ள அனைத்துச் சொற்களைத் தொகுத்துக் கூறுவது. மேலும் அதற்குரிய பொருளை உறுதிபடக் கூறவேண்டாமா ? ஆகவே **'இதுதான் இச் சொல்லின் பொருள்'** என்பதை அறிந்துகொள்ள உதவுவதே நிகண்டு என்று முதல் சூத்திரத்தால் விளக்குகிறார் **யாஸ்க முனிவர்.**

(निघण्टवः कस्मात् ? निगमा इमे भवन्ति–निश्चयेन निगूढार्थः सन्तो मन्त्रार्थान् - गमयन्ति - ज्ञापयन्ति इमे ।)

ஆக யாஸ்க முனிவர் இயற்றிய **'யாஸ்க நிருக்தமே'** நிகண்டு என்ற (அகராதி) துறை தோன்றக் காரணமாயிற்று எனலாம்.

இவரது காலம் பற்றிய செய்திகளை மாக்ஸ்முல்லர், கீத், பண்டார்கர் போன்றவர்கள், கி. மு. 24 ஆம் நூற்றாண்டு என்று கூறுகிறார்கள். இவர் பாணிணியின் காலத்துக்கும் முற்பட்டவர் என்று பல்வேறு சான்றுகளுடன் கூறுகின்றார்.

ஆக, மேலே கூறப்பட்டுள்ள ஆறு துறைகளையும் அடிப்படையாகக் கொண்டே பல்வேறு இலக்கண-இலக்கியங்களும் தோன்றின.

மதங்களின் வளர்ச்சி:

'மதம்' என்ற சொல்லுக்கு **'கொள்கை'** என்பதே பொருள். வேத நெறியையும்- அவற்றின் சடங்குகளையும்

ஏற்றுக்கொள்ளாத பிற்காலத்தினர் தமது கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டனர். அங்ஙணம் எழுந்த மதங்கள் **வேதநெறிக்குப் புறம்பான மதங்கள். இவை பௌத்தம், சமணம், சாருவாகம், காபாலிகம்** போன்று அறுபதுக்கும் மேற்பட்ட மதங்கள் நம் இந்தியாவில் தோன்றின. இவைகளை **அவைதிக மதங்கள்** என்ற சொல்லால் சுட்டப்பட்டன. இந்த மதங்களை ஏற்றுக்கொண்ட மன்னர்களும் இருந்தனர். இதன் காரணமாக அந்த அந்த மதங்களுக்கு அடிப்படையாக பல நூல்களையும் இயற்றினர். அவைகளில் பெரும்பாலான சொற்கள் ஸம்ஸ்கிருத மொழிச் சொற்களாகும். (இங்கு ஸம்ஸ்கிருதம் என்று அறிவதற்காகவே தவிர அவை ப்ராகிருத மொழிகளில் அமைந்ததாகும்)

பாணினி தோன்றுவதற்கு முன்னும், வேத காலத்திற்குப் பின்னும், மக்கள் பல்வேறு முறைகளில் பேசியும் எழுதியும் வந்தார்கள். இதனால் இந்த சொற்களின் அடிப்படையாக இருப்பது வேதமொழி என்பதை அறிந்து அவற்றைப் பிரித்து இது ஸம்ஸ்கிருதம், இது பிராகிருதம், என்று பிரிக்க ஒரு இலக்கணம் இயற்றினார் பாணினி.

இதனால்தான் இது **'ஸம்ஸ்கிருதம்' செப்பனிடப் பட்ட மொழி** என்பதாக வழங்கலாயிற்று. இதன் பயனாக **பிராகிருதம்-சம்ஸ்கிருதம்** என்று இரு பிரிவில் நூல்கள் வளர்ச்சி அடைந்தன. வசன நூல்களும், இலக்கிய நூல்களும், பிராகிருத மொழியிலும் பல எழுந்தன. ஸம்ஸ்க்ருத மொழியிலும் பல நூல்கள் தோன்றின. இதன் காரணமாக பல்வேறு சொற்களும் தோன்றின. இவற்றைத் தொகுக்கவே **'நிகண்டுகள்'** உருவாயின.

மேலும், பல்வேறு இலக்கிய-இலக்கண வளர்ச்சியின் காரணமாக மொழிகள் வளம் பெற்றன. (மொழிகளின் வளர்ச்சி பற்றி இங்கு சுருக்கமாக எழுதவேண்டிய கடமையால் இதனை நான் இங்கு விளக்கியுள்ளேன்).

கோசங்கள் என்னும் நிகண்டுகள்:

கோசங்கள் மாணவர்கள் இலக்கியங்களில் காணப்படும் சொற்களின் பொருளை அறிந்து கொள்ள உதவியாக இருப்பன. யாஸ்க முனிவர் வேதங்களின் சொற்களுக்குப் பொருள் கூறியதைப் போல புலவர்கள் இயற்றிய பல்வேறு சொற்களைத் தொகுத்து அவற்றின் பொருளை அறிவதற்காகவும், எளிய சுலோகங்கள் மூலம் தொகுக்கப்பட்டவைகளே நிகண்டுகள். இத்தகைய நிகண்டுகள் இந்திய மொழிகள் பலவற்றுக்கும் பொருந்தும். அதாவது இந்தியாவில் அந்தந்த மாநிலங்களில் வழங்கிவரும் மொழிகளுக்குரிய இலக்கிய-இலக்கணங்களும்; இதன் காரணமாக பல நிகண்டுகளும் தோன்றின.

இத்தகைய நிகண்டுகளில் பல நிகண்டுகள் வினைச் சொற்களைத் தொகுத்துக்கூறும். பல நிகண்டுகள் பெயர்ச் சொற்களைக் கூறும். ஒரு பொருளுக்குரிய பல சொற்களையும், பல பொருளுக்குரிய ஒரு சொற்களையும் தொகுத்துக் கூறும் நிகண்டுகள் தோன்றின. இதைப் போலவே ஸம்ஸ்க்ருத மொழிக்குரிய நிகண்டுகள், காலந்தோறும் பல புலவர்களால் பலமொழிகளில் தோற்றுவிக்கப்பட்டன.

ஆக, நிகண்டுகளின் நோக்கம் மாணவர்கள் எளிமையாக சொற்களின் பொருளையும், அந்தப் பொருளைக்கூறும் பிற சொற்களையும் மனனம் செய்து, உரிய முறையில் பயன்படுத்த உதவியாக இருக்கும் என்பதே. இன்று மனனம் செய்யும் முறை மறந்தே போனது. 'வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்' அல்லவா ?

இன்று, நாம் பொருளை அறிய வேண்டுமாயின் அகராதியைத் (Dictionary) தேடுகிறோம். அந்த நாளில் அகராதி என்பது கிடையாது. அகராதி என்பது ஆங்கிலேயர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. அந்நாளில் நிகண்டுகள் தான் உண்டு. இங்கு ஜான்ஸன் டிக்ஷணரி தோன்றியது பற்றி சுவையான செய்தியைக் காணலாம்.

ஜான்ஸனின் தந்தை புத்தக வியாபாரி. அவர் இல்லாத சமயங்களில் ஜான்ஸன்தான் கடையைப் பார்த்துக் கொள்வார். வியாபாரமில்லாத சமயம் அங்கிருந்த புத்தகங்களைப் படிப்பார். அப்போது அவர் பள்ளி மாணவராக இருந்ததால் நூலில் கையாளப்படும் சொற்களுக்குப் பொருள் புரியாது. மேலும் ஒரே சொற்கள் இடத்திற்குத் தகுந்தாற்போல பொருள் கொள்ள வேண்டியிருந்தது. இதனை தன் தந்தையிடம் கூறினார். 'இதன் பொருள் இதுதான். இச்சொல் இன்ன இன்ன பொருளைத்தரும்' என்று விளக்கினார். ஜான்ஸன் மனதில் இத்தகைய சொற்களை ஏன் தொகுக்கக்கூடாது ? என்று நினைத்தார். அதுவே பின்னாளில் ஜான்ஸன் டிக்ஷ்ணரி (Jonson Dictionary) தோன்றக் காரணமாயிற்று. அன்று தோன்றிய ஜான்ஸனின் எண்ணமே இன்று உலகிலுள்ள கோடிக்கணக்கான மாணவர்களுக்கு ஏன் பெரியவர் களுக்குக்கூட உதவி வருகிறது எனில் மிகையில்லை.

இன்று ஜான்ஸன் நினைத்ததைப் போலவேதான் அன்று யாஸ்க முனிவரும் அன்று நினைத்திருப்பார் என்று எண்ணத் தோன்றுகின்றது. யாஸ்கரைத் தொடர்ந்து பல நிகண்டுகள் காலங்காலமாகத் தோன்றி வளர்ந்தன. அப்படித் தோன்றியதே **அமரகோசம்** ஆகும்.

அமரகோசமும் அதன் ஆசிரியரும் :

காலங்காலமாக தோன்றி வளர்ந்த நூல்களில் அமரகோசமும் புகழ் பெற்ற கோசமாகும். இந்த நூலின் ஆசிரியர் **அமரஸிம்மன்.** இவர் ஜைன மதத்தைச் சேர்ந்தவர். இவர் காலம் பற்றி அறிய முடியவில்லை. இருப்பினும் **அமரசிம்மன் ஆதி சங்கரர் காலத்தவர்** என்பதை அறிய ஒரு நிகழ்ச்சியினை ஆதிசங்கரரின் வரலாற்றைக் கூறும் நூலான **சங்கர விஜயத்தில்** காணப்படுகிறது.

ஆதிசங்கரர் அத்வைதக் கொள்கையை, வேதநெறியை பரப்பியவர். அப்போது புகழ்பெற்றிருந்த சைனம், பௌத்தம்,

சார்வாகம், காபாலிகம் போன்ற மதங்களில் வல்ல அறிஞர்களுடன் வாதிட்டு வெற்றி கண்டவர் சங்கரர். ஜைன மதத்தில் வல்லவனாக விளங்கிய அமரசிம்மனுடன் வாதிட்டார். அமரசிம்மன் (இந்நூல் ஆசிரியர்) ஜைன மதக் கருத்துக்களை முன்னிருத்தி வாது புரிந்தார். இவர்கள் இருவரும் வாது புரியும்போது, இருவருக்குமிடையே ஒரு திரைச்சீலை கட்டப்பட்டிருந்தது. சங்கரர் மிகவும் நுட்பமான கேள்விகளைக் கேட்க, தக்க பதிலும் நுட்பமாகவே வெளிவந்தது. இத்தகைய வாது புரிந்தவர் அமரசிம்மனின் உபாஸனா தெய்வமான ஸரஸ்வதி தேவியே (ஜைன சமயத்தில் ஸரஸ்வதியை வழிபடும் வழக்கமுண்டு) என்பதை தனது ஞானதிருஷ்டியால் அறிந்த சங்கரர், தேவீ! இது முறையோ ? என்று பிரார்த்தனை செய்ய, உடனே திரைச்சீலை அறுந்து வீழ்ந்தது. அச்சமயம் வாதில் தோற்றுப்போன அமரசிம்மன், தான் எழுதிய அனைத்து நூல்களையும் தீயிட்டுக் கொளுத்திக் கொண்டிருந்தான். சங்கரர் ஓடிச் சென்று அமரசிம்மனின் கையைப் பிடித்துத் தடுத்து, அவர் கையிலிருந்த எஞ்சிய ஓலைச்சுவடியைப் பறித்தார். அமரசிம்மனிடமிருந்து பறித்த அந்தச் சுவடியே அமரகோசம் என்று புகழ் பெற்ற நூற்சுவடி என்று சங்கரவிஜயம் கூறுகிறது.

ஆதிசங்கரரின் காலம் 4 ஆம் நூற்றாண்டு என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். (கி.மு. 509-கலியுகம் 2593 என்றும் காணப்படுகிறது) இதனால் அமரசிம்மனும் நான்காம் நூற்றாண்டைச் சார்ந்தவர் என்று கொள்ளலாம். மேலும் ஆதிசங்கரர் சிவானந்த லஹரி என்ற நூலில் द्राविड शिशुः என்று குறிப்பிடுகிறார். இந்த த்ராவிட சிசு என்பது திருஞான சம்பந்தரையே குறிக்கிறார் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். இதனால் அமரசிம்மன் நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்று கொள்வது பொருந்தும்.

ஆயின் சம்ஸ்க்ருத இலக்கிய ஆராய்ச்சியாளர்கள் அமரசிம்மனின் காலம் பற்றி ஏனோ குறிப்பிடவில்லை என்பதும் இங்கு சிந்திக்கத்தக்கது.

அமரகோசம் : அமரகோசம் தோன்றுவதற்கு முன்னரேயே பல கோசங்கள் தோன்றியுள்ளன. அவை பெரும்பாலும் மறைந்தே போனது. இதைப்போலவே சமண சமயத்தைச் சார்ந்த பல புலவர்களால் இலக்கணங்களும் தோன்றின. இவை தோன்றிய போதிலும் பாணினியின் இலக்கணமே இன்றளவும் படிக்கப்பட்டு வருகிறது. இதற்கான காரணம் புலப்படவில்லை. பாணினி, வரருசி போன்றவர்களின் இலக்கணக் குறிப்புக்களையும் கருத்துக்களையும் இவர்களுடைய நூற்களின் சிறப்புக்களையும் அறிந்த அமரசிம்மன், இவர்களின் கருத்துக்களையே பின்பற்றியுள்ளார். இதனை இவரது நூலின் அறிமுகத்திலேயே 'समाहृत्यान्यतन्त्राणि संक्षिप्तैः' என்றும், 'पूर्वसूरिभिः' என்றும் குறிப்பிட்டுள்ளார். இதற்கு லிங்கபட்டியத்தின் உரையிலும் மேற்கண்ட கருத்துகள் இடம்பெற்றுள்ளன.

இவர் சமண சமயத்தைச் சார்ந்தவரானாலும் இந்து சமயத்தில் இன்றளவும் கடைபிடிக்கும் சில கர்மாக்களைப் பற்றியும் குறிப்பிடுவது குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாகவும் இந்து சமயத்தினர் இன்றளவும் அமரகோசத்தைப் பயின்று வருகின்றனர்.

இப்படி அனைவரும் பயன்படுத்தும் இந்த அமரகோசத்திற்கு ஹர்ஷர் கோச ரத்னம் (कोशरत्नं । अमरखण्डनं) என்ற பெயரில் ஒரு **மறுப்பு நூலும்** எழாமல் இல்லை. மறுப்பு எழுதப்பட்டாலும் புலவர்கள் அந்த நூலுக்குச் செவி சாய்க்கவில்லை என்பதும், இந்த அமரகோசத்திற்கு எழுந்த உரை நூல்களுமே சான்று. இதற்கான பட்டியல் (அனுபந்தம் எண்-3 காண்க) இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

அமரகோசமும் தமிழும் :

இந்த அமரகோசத்தில் மூன்று காண்டங்களும் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டு அச்சிடப்படாமல் சுவடியாகவே இருக்கின்றது என்று மு. சண்முகம்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டுள்ளார். ஸம்ஸ்க்ருத மொழிச் சொற்களின் பொருளை தமிழ் மக்களும் அறிவதற்காக 'பல பொருள் ஒரு சொல்லுக்காக' **'ஆரிய நிகண்டு'** என்ற பெயரிலும், வீரவநல்லூர் அருணாசல நாவலர் 1900ல் இயற்றிய **'விரிவு நிகண்டு'** என்பனவற்றையும் குறிப்பிடலாம்.

அமரகோசத்தின் பதிப்புகள் :

அமரகோசம் பல்வேறு நாடுகளில் பல்வேறு மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. இத்துடன் பல்வேறு இந்திய மொழிகளிலும் இந்த நூல் மொழியாக்கத் துடன் வெளிவந்துள்ளன. **(அனுபந்தம்- I காண்க)** சரசுவதி மகால் நூலக வெளியீடாக தற்போது தமிழில் குறிப்புரையுடன் வெளிவந்துள்ளது. அமரகோசம் 1870 மற்றும் மூலம் ஸம்ஸ்க்ருத மொழி, கிரந்த எழுத்திலும், தமிழிலும் வெளிவந்துள்ளது. **ஆயின் கடந்த 100 ஆண்டுகளாக தமிழில் இந்த நூலை ஒருவரும் அச்சிடவில்லை என்பதும்,** இந்த நூலகத்தின் வாயிலாக வெளிவரும் சம்ஸ்கிருதப் பிரிவின் சார்பில் இந்த அமரகோசமே முதன்முதலாக கோசம் என்ற பிரிவில் வெளிவருகிறது என்ற செய்தியும் குறிப்பிடத்தக்கது.

இந்த நூலின் பதிப்பு முறை :

தற்போது வெளிவரும் இந்த தமிழ் குறிப்புரைக்கு **'அமர கல்ப வல்லி'** என்று பெயரிடப்பட்டுள்ளது. காரணம் தேவையான பொருள் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. வேறு உரையாசிரியருடன் பொருள் வேறுபடுமாயின் தேவையான குறிப்பு மட்டுமே கொடுக்கப்பட்டும், பாடவேறுபாடுகளும் சுட்டப்பட்டுள்ளன.

அமரகோசத்தின் அமைப்பு :

நூலாசிரியர் அமரகோசத்திற்குக் கொடுத்த பெயர் 'நாமலிங்கானு சாஸனம்' என்பதாகும் (நாம-லிங்க) பெயர் சொற்களும் அவற்றிற்கு பால் வேறுபாடுகளையும் ஒரு சேர அறியவேண்டும் என்பதே. ஸம்ஸ்க்ருத மொழியில், பால் வேறுபாடுகளை மூன்றாகப் பிரிக்கப்படுகின்றன. புல்லிங்கம், ஸ்த்ரீலிங்கம், நபும்ஸகலிங்கம் என்பன. இதனை ஆண்பால், பெண்பால் இவை அல்லாதன நபும்ஸக லிங்கம் என்று கொள்ளவேண்டும். இவற்றை அறிந்த பின்னரே வாக்கியங்ளை அமைத்தல் இயலும். பால் வேறுபாடுகளை நூல் முழுவதும் கூறிய போதிலும் சில பெயர்கள் ஆண்பாலிலும், பெண்பாலிலும் வரும். சில பெயர்கள் ஆண்பால் அல்லது பெண்பாலிலும், இவையல்லாத நபும்ஸக லிங்கத்திலும் வரும். இவற்றுக்கான விதிகள் பாணிணி வரருசி போன்ற இலக்கண ஆசிரியரைப் பின்பற்றி **லிங்கசேஷ ப்ரகரணம்** என்ற பெயரில் விசேஷ விதியாகவும் கூறியுள்ளார். இதைப்போல अव्यय ப்ரகரணம் என்ற பகுதியில் பிரிக்க முடியாத சொற்களைத் தொகுத்தும், வேற்றுமை உருபுகளால் மாறுபடாத சொற்களைத் தொகுத்தும் கூறியுள்ளார். இப்பகுதி மாணவர்களுக்கு பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை.

மேலும், ஒரு பொருளைச் சுட்டும் சொற்களை வரிசைப் படுத்திக் கூறியுள்ளார். அதாவது ஒரு சொல் ஒரு பொருள்; பல சொல் ஒரு பொருள்; ஒரு சொல் பல பொருள் என்ற வேறுபாடுகளையும் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக மலைகள், காடுகள், நதிகள் தண்ணீரின் பெயர்கள், நீரில் விளையும் பொருள்கள், சாதாரண படகு முதல் கப்பல் வரையுள்ள சொற்கள், குன்று முதல் இமயம் வரையுள்ள மலைகள், மலைகளில் காணப்படும் சமவெளிகள் போன்று பல்வேறு பெயர்ச்சொற்களும், மரம், செடி, கொடிகள் போன்றவற்றுக்கான சொற்களையும் கூறியுள்ளார்.

பொதுவாகவே அனைத்து மொழிகளும் உள்ள நிகண்டுகள் இங்ஙனமே ஆயினும், இதில் பல செய்திகளை உள்ளடக்கியதாகக் இணைக்கப்படுகிறது.

நாமலிங்கானுசாஸனம் என்ற பெயரை நூலாசிரியர் அமரசிம்மன் கொடுத்திருந்தாலும் அனைவரும் இந்த நூலை **'அமரகோசம்'** என்றே அழைத்தனர்.

இப்பதிப்பின் சிறப்பம்சம் :

தாவரவியலைப் படிக்கும் மாணவர்கள் வசதிக்காக (Botanical Names) அந்த அந்த மரம், செடி, கொடிகளுக்கான விஞ்ஞானப்பெயர், அதில் காணும் மாறுபாடுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. இதுவரை பதிப்பான அமரகோசங்களில் இந்த அமைப்பு காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வைசிய வர்க்கம் என்ற பிரிவிலுள்ள **மருத்துவக் குறிப்புக்கள்,** அதிலுள்ள வேறுபாடுகள், ஸம்ஸ்க்ருதப் பெயர்கள், அவற்றுக்கான பொருள் ஆகியவற்றை தேவையான இடங்களில் சிறு உரையாகவும் எழுதப் பட்டுள்ளது. இது ஆயுர்வேத, சித்த மருத்துவர்களுக்கு உதவும். மேலும், தொல்லியல், விலங்கியல் போன்ற துறையில் பயிலும் மாணவர்கள், ஆய்வாளர்கள் ஆகியோருக்கு சம்ஸ்க்ருதப் பெயர்களை அறிய இந்த கோசத்தின் உரை உதவும் என்று கருதுகிறேன்.

இப்பதிப்பிற்கு எடுத்தாண்ட நூல்கள் :

மூலச் சுலோகங்களை, அடையாறு நூலகத்தின் வெளியீட்டை அடிப்படையாகக்கொண்டு பதிப்பிக்கப் பட்டுள்ளது.[1]

அமரபத வ்ருத்தி என்ற பெயரில் **லிங்கைய சூரி** இயற்றிய ஸம்ஸ்க்ருத உரையின் தமிழ் மொழிபெயர்ப்பாக

1. Dr. Ramanathan.

திரு வேங்கடாச்சாரியார் அவர்கள் गुरुबालप्रबोधिका என்ற பெயரில் **1915** ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார்கள். இது கிரந்த எழுத்தில் சம்ஸ்க்ருதமும், தமிழும் கலந்த மணிப்ரவாள நடையில் அமைந்ததாகும்.

सुबोधिनी *(ஸுபோதினி)* என்ற பெயரில் *(*भानुजीदीक्षितः*)* பானுஜீ தீக்ஷிதர் இயற்றிய உரை ஆகிய நூல்கள் எடுத்தாளப்பட்டுள்ளன.

அமரகோசம் மூன்று காண்டங்களைக் கொண்டது.

முதல் காண்டம் - 1-2 ஆகவும்

இரண்டாம் காண்டம் 3,4ல் 1, 4ல் ஆகவும்

மூன்றாம் காண்டம் 5,6,7 ஆகிய 8 தொகுதிகளாக இந்த நூலகத்தின் வாயிலாக வெளிவந்துள்ளன.

நன்றியுரை:

அமரகோசம் 2001 ஆம் ஆண்டு மத்திய அரசின் திட்டப்பணியில் 1,2 தொகுதிகளாக முதற்காண்டம் வெளியிடப்பட்டது. இரண்டாம் காண்டம் 3 தொகுதிகளாக சிறப்புக்கேண்மை பதிப்பாசிரியராக இருந்து வெளியிடப் பட்டன. பின்னர், நூலகரும் என் நண்பருமான முனைவர் எஸ். சுதர்ஷன் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மூன்றாம் காண்டம் வெளிவந்துள்ளது. இந்த நூல் பதிப்புக்காகத் தொடங்கப்பட்ட காலத்தில் எனக்கு எழுந்த சந்தேகங்களை நீக்கி, என்னை இதில் ஆற்றுப்படுத்திய காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ ஸ்வாமிநாத ஆத்ரேயர் அவர்களை நினைத்து வணங்குகிறேன்.

இப்பணிக்கு உறுதுணையாக நின்ற அச்சகப்பிரிவில் பணியாற்றி ஓய்வு பெற்ற திரு. ஆர். சுப்பிரமணியன் அவர்களுக்கும், மேலும் இந்நூலுக்கான அச்சுப்பணியை ஆரம்பம் முதல் நிறைவுத் தொகுதி வரை சிறப்பாக செய்த திருமதி வி. பர்வதம் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூலைப் பதிப்பிக்க ஆணை வழங்கிய மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் சரசுவதி மகால் நூலக இயக்குநர் டாக்டர் ந. சுப்பையன் இ.ஆ.ப., அவர்களுக்கும், நூற்பணியினைச் செவ்வனே நிறைவேற்றிடத் துணைபுரிந்த நிருவாக அலுவலர் திரு. ம. சங்கரநாராயணன், B.A., அவர்களுக்கும், நூலகர் முனைவர் எஸ். சுதர்ஷன் M.A.,B.Lit.,MLIS.,Ph.D., அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நூலகக் கணினி மற்றும் நூற்கட்டுத் துறை பணியாளர்களுக்கும் என் உளமார்ந்த நன்றிகளை உரித்தாக்குகின்றேன்.

இதற்கு முன் வெளிவந்த அமரகோசத்தின் பல தொகுதிகளை மாணவர்களும், ஆய்வாளர்களும் வாங்கிப் படித்துப் பயன் அடைவதால் மிகக் குறுகிய காலத்திலேயே இரண்டு, மூன்று பதிப்புகள் வந்திருகின்றன என்பதை அறிந்து மகிழ்வடைகிறேன். வெளிவந்துள்ள 8 தொகுதிகளும் இரண்டு தொகுதிகளாகவோ அல்லது ஒரே தொகுதியாகவோ வெளிவந்தால் படிப்பவர்களுக்கு அது மிகவும் உதவும் என்று கருதுகிறேன்.

என்னை இப்பணியில் ஈடுபடுத்திய இறையருள், இது போன்ற பணிகளைத் தொடர்ந்து செய்ய அருள வேண்டும் என்று வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்
22-01-2015

என். ஸ்ரீநிவாசன்,
சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்.

அனுபந்தம் - 1

Amarakosa - Devanagari with English notes and other...

Amarakosa with Italian Translation (Pub. Rome 1798)

Text in grantha script P. Pau lino and Bartholomase.

Amarakosa - French Translation, nots and index in 2 vols.
Pub: A.L. Deslongchamps, Paris, 1839, 1845.

Indian (Translation or meanings)

Amarakosa - Bangali- Calcuta 1816

,, Hindi - Benares 1879 and 1884-Different Translation

,, Kannada-Bangalore 1924,1835,1863

,, Malayalam - Kottayam 1849,1858
Cochin 1876

,, Oriya - Cuttack 1894 with oriya Comentry
,, ,, - Puri 1910

,, Tamil - Madras - 1870
,, ,, with Amarapada Kalpataru, Madras 1915

,, Telugu - Madras, 1867-68-75.
,, ,, with English inter Pretation - Madras-1858,1873,1904

,, ,, - Lingabhatteyam - Madras-1899

,, Tamil with Tamil comenteri. Madras 1870,1875,1915

அனுபந்தம் - 2

அமரகோசத்திற்குரிய உரை, குறிப்புரை-பதவுரை முதலியன எடுத்துக்காட்டுதற்கான பட்டியல்

अमरकोश:
अमरपदविवरण by विश्वभारती
अमरमाला,
अमरान्वयप्रकाश:
अमरकोश: पञ्चिका,
अमरकोश: टिप्पन
अमरकोश: वृत्ति,
अमरकोश: टीका
अमरकोश: वृत्ति:,
अमरकोश: व्याख्या
अमरकोश: प्रतिपदटीका
अमरकोश: मनोरमा
अमरकोश: मर्मभेदिनी by मल्लिनाथ
अमरकोश: लघुभाषा by रविवर्मन्
अमरकोश: व्याख्याप्रदीप by अच्युतउपाध्याय:
अमरकोश: बोग्मग्रन्ति by अप्पय्याचार्य:
अमरकोश: क्रियाकल्प: by आशाधर:
अमरकोश: काशिकावृति: by काशिनाथ:
अमरकोश:
अमरकोश: कौमुदि by कुमुदीश्वर:
अमरकोश: अमरकोशोद्धारण by कृण्णस्वामिन्
अमरकोश: बालबोधिनी by गोश्वामिशिरोमणिभट्ट:
अमरकोश: काशिकावृति: by काशिनाथ:
अमरकोश: शब्दार्थसन्दीपिका by नारायणविद्याविनोद:
अमरकोश: पञ्जिका or पदार्थकौमुदी: by नारायण शर्मन्
अमरकोशछ सुबोधिनी: by नीलकण्ठशर्मन्
अमरकोशमाला by परमानन्दशर्मन्
अमरोद्योत: by पुरुषोत्तम तर्कालङ्कार:
मुग्धबोधिनी by भरतसेना
व्याख्यासुधा-सुबोधिनी by भानुजीदीक्षित:
अभिधानबोधिनी by लक्ष्मीधर:
अमरपदवृति: by लिङ्गभट्ट:
अमरार्थ सग्रह:

அனுபந்தம் - 3*

ஸம்ஸ்க்ருத மொழியிலுள்ள பல்வேறு நிகண்டுகளின் தொகுதிகள் (முழுமை பெறாத பட்டியல்)

எடுத்துக்காட்டுக்காக

अभिधानमाला 23851 T.M.S.S.M. Library

नानार्थसङ्ग्रहः 23855 T.M.S.S.M. Library

धनञ्जयनिघण्टुः 23856 T.M.S.S.M. Library

पदमणिमञ्जरी 5011 ,, by श्रीधरवेङ्कटेशः

कल्पद्रुकोशः 4739-41 ,, by केशव दैवज्ञ Composed 1660 AD

पदमञ्जरी 5457 ,, by नल्लाकवि

परिभाषासङ्ग्रहः 5722 ,, by वैद्यनाथ दीक्षितः

पदमञ्जरी 5010 ,, by वेङ्कटेश्वर शास्त्रिन्

उनादि निघण्टुः 4732 ,, by वेङ्कटेश्वर शास्त्रिन्

उनादिमणिदीपिका 5675 ,, by रामभद्रमखिन्

शब्दरत्न समन्वयः 5056 ,, by शाहजिमहाराजा

शब्दार्थ सङ्ग्रहः 5063-4

शृङ्गारकोशः 4611 ,, by गीर्वाणेन्द्र दीक्षितः

एकाक्षररत्नमाला 4737

एकाक्षररत्नकमाला-निघण्टुः 4733-6 पुरुषोत्तमः

द्विरूपकोश 4763-5

त्रिरूपकोशः 6759

आख्यानमणिकोशः by नेमिचन्द्रः (Jain)

एकाक्षरीकोशः by भास्करपण्डितः

---

* New Catalogues catalogorum - Vol. 1,2,3 and 5 volumes, University of Madras, Sanskrit Dept.

एकाक्षरीनाममाला by वररुचिः

by सुधाकलश(Jain) இதேபெயரில் பலர் இயற்றியுள்ளனர்

एकाक्षरीनामकोशः by महिमसिंहगणि

एकाक्षरीकोशः by महादेवः

,, by वनमालिन्

एकार्थनाममाला by सौभरी

ऐन्द्रनिघण्टुः by पुरुषोत्तमदेव

ओषधिनिघण्टुः or गणनिघण्टुः by चन्द्रानन्द son of रविनन्द (Medical)

ओषधिनिघण्टुः or मदनविनोदनिघण्टुः by मदनपाल composid 1307 A.D.

ओषाधिनाममाला or लघुनिघण्टुः by व्यासकेशववर्मा

वैद्यनाममाला or ओषधिनाममाला by இதே பெயரில் பல

कण्ठभूषणालङ्कारः by

कोशकल्पतरु by विश्वनाथवैद्यः (1629-76) A.D.

कोशरत्न (अमरखण्डन) by हर्षः

सर्वार्थ शिखामणि or कोशरत्न by दिवाकरभट्टः

कोशसङ्ग्रहः by मधुश्रीधरः

कोशसङ्ग्रहः by राधाकृष्णः

कोशसारः by शिवरामः

कोशसावतंसः by राघव आपाखन्डीकरः

(Maharashtra Bramin)

இதேபோன்று பல நிகண்டுகள் உள்ளன

श्रीः

॥ अमरकोशम् ॥

அமரகோசம்

5. लिङ्गादिसङ्ग्रहवर्गः*

இந்த நூலின் தொடக்கத்தில் வடமொழி பெயர்ச் சொற்களுக்கு முழுமையாக லிங்க வேறுபாடுகளைக் கூறுகிறேன். (संपूर्णमुच्यते वर्गेर्नामलिङ्गानुशासनम्) என்று தன் விருப்பத்தைக் கூறுகிறார். ஆனாலும் அவருடைய உள்ளத்திற்கு திருப்தி ஏற்படாமையால் இந்த வர்கத்தில் மேலும் சில சொற்களுக்கு லிங்க வேற்றுமையைக் கூறுகிறார்.

(मू) सलिङ्गशास्त्रैः सन्नादिकृत्तद्धितसमासजैः ।
अनुक्तैः संग्रहे लिङ्गं संकीर्णवदिहोन्नयेत् ॥ 1483

இந்த வர்கத்தில் லிங்கங்கள் பற்றிய சாத்திரக் கருத்துக்கள் வடமொழி இலக்கணங்களில் காணப்படுபவை. இவற்றை பாணினி, வரருசி போன்றவர்கள் வடமொழி இலக்கணங்களில் கூறியுள்ளனர். அந்த இலக்கணங் களுடன் (अप्रत्ययं, कृत्प्रत्ययं, तद्धितप्रत्ययं, समासं) சென்ற வர்க்கங்களில் கூறப்படாத சொற்களின் லிங்கவேறுபாடுகளை அறிந்துகொள்ள இந்த வர்க்கத்தில் சிறப்பாகக் கூறுகிறார்.

---

* சென்ற வர்க்கம் வரை தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்த வர்க்கத்தில் வடமொழி இலக்கணத்தையொட்டிய பல்வேறு ப்ரத்யயங்கள், அதனால் மாறுகின்ற பதங்கள் அதற்குரிய பால்வேறுபாடுகள் ஆகியவைகளை தமிழாக்கம் செய்ய இயலவில்லை. இதற்கு (Trancelettaration) செய்யப்பட்டுள்ளன. கண்டுகொள்க.

இந்த கோசத்தின் தொடக்கம் முதல் வடமொழி பெயர்ச்சொற்களுக்கு பால் வேறுபாடுகளை கூறியதோடு, பல சிறப்பு விதிகளையும் கூறியுள்ளார் அமரகவி. அங்கு கூறிய விதிகளும், இங்கு கூறப்படும் விதிகளும் முரண்பாடுபட்டால் எந்த விதியைப் பின்பற்றுவது ? என்று நமக்கு ஐயம் வருமாயின், அதற்கு விளக்கம் அளிக்கிறார் இந்த கீழேயுள்ள சுலோகத்தால்.

लिङ्गशेषविधिर्व्यापि विशेषैर्यद्यबाधितः ।

இந்த வர்க்கத்தில் கூறப்படும் பால்வேறுபாடுகள் தனியானவை. முன்பு கூறிய லிங்கங்கள் மற்றும் சிறப்பு விதிகள் ஆகியவற்றுக்கு, இதில் கூறப்பட்ட பால் வேறுபாடுகள் பொருந்தாது.

स्त्रियां ....

स्त्रियां என்னும் சொல், पुंस्त्वे सभेदानुचराः என்பதால் ஆண்பால் சொற்கள் வரை பெண்பால் சொற்களும் வரும். (இது முன்பே சுட்டிக்காட்டி விளக்கப்பட்டுள்ளதைக் காண்க) உதாரணமாக श्रीः, धीः, भूः, भ्रूः (ஶ்ரீ:, தீ:, பூ:, ப்ரு:)

..........................सयोनिप्राणिनाम च ॥ 1484

யோனிகளுடன் (பெண்குறியுடன்) கூடிய உயிரினங்களின் பெயர்ச் சொற்கள் பெண்பால் ஆகும்.

1. माता (स्त्री), 2. योषित् (स्त्री), 3.सुरभिः (स्त्री) 4. करेणुः (स्त्रीः)

1. மாதா (பெ.ஆ.) தாய்
2. யோஷித் (பெ.த்) பெண்
3. ஸுரபி: (பெ.இ.) பசு
4. கரேணு: (பெ.உ.) பெண் யானை

नाम विद्युन्निशावल्लीवीणादिग्भूनदीह्रियाम् ।

1. विद्युत् (स्त्री), 2. निशा (स्त्री), 3. वल्ली (स्त्री), 4. वीणा (स्त्री), 5. दिक् (स्त्री), 6. भू (स्त्री), 7. नदी (स्त्री), 8. ह्री (स्त्री).

1. வித்யுத் (பெ.த்.) மின்னல்
2. நிசா (பெ.ஆ) இரவு
3. வல்லீ (பெ.ஈ) கொடி
4. வீணா (பெ.ஆ) வீணை
5. திக் (பெ.க்) திசை
6. பூ (பெ.ஊ) பூமி
7. நதீ (பெ.ஈ) ஆறு
8. ஹ்ரீ (பெ.ஈ.) வெட்கம்

अदन्तैर्द्विगुरेकार्थो ....

அகாரத்தில் முடியும் உத்தர பதங்களுடன் இணைந்துவரும் சொற்கள் 'ஸமாஹாரத்தில்' த்விகு ஸமாஸமாக வந்து பெண்பாலாக ஆகும். द्विगुसमासं எனில் எண்ணிக்கைகளைக் குறிக்கும் சொற்களுடைய சமாஸமாகும். संख्यापूर्वकं समासं இதற்கு உதாரணம் - पञ्चानांमूलानां समाहरः पञ्चमूली; दशमूली; त्रिलोकी ஆகியவை.

.... न स पात्रयुगादिभिः ॥ 1485

முன்பு கூறிய அந்த 'த்விகு ஸமாஸம்', पात्रयुगादिभिः பாத்திரயுகம் முதலிய சொற்கள் உத்தர பதமாக இருப்பின் பெண்பாலில் வராது. இதற்கு உதாரணம் -

1. पञ्चपात्रं(न)பஞ்சபாத்ரம் (ந.அ.) ஐந்து பாத்திரங்கள்
2. चतुर्युगम् (न) சதுர்யுகம் (ந.அ.) நான்கு யுகங்கள்
3. त्रिभुवनं (न) த்ரிபுவனம் (ந.அ) மூன்று உலகங்கள் என்பதாகும்.

तल् ....

தல் ப்ரத்தியயம், பாவார்த்தத்திலும் (भावार्थे) (தன்மை) ஸமூஹார்த்தத்திலும் (கூட்டம், குழு) ஸ்வார்த்தத்திலும் (தன்னுடைய சொந்தமான அர்த்தத்திலும்) வரும் சொற்களின் பின்னால் அல்லது அத்துடன் வரும் 'தல்' ப்ரத்தயயங்களின் 'பால்' பெண்பாலாகும். இதற்கு உதாரணங்கள்-

1. भावार्थे - पुरुषभावः पुरुषता, अश्वता
2. समूहार्थे -ग्रामाणां समूहः, ग्रामता, जनता, बन्धुता, सहायता முதலியன.
3. स्वार्थे-देवा एव, देवता முதலியன.

.... वृन्दे येनिकट्यत्रा ....

वृन्दे-(समूहार्थे)(கூட்டம்/குவியல்) ஸமூஹார்த்தத்தில் விதிக்கப்பட்ட य, इनि, कट्यच्, त्र (ய, இதி, கட்யச், த்ர) என்கின்ற ப்ரத்யயங்கள் சொற்களின் இறுதியில் வந்தால் அச்சொற்கள் பெண்பாலில் வரும். இதற்குரிய உதாரணங்கள்-

1. 'य' प्रत्यान्ते-पाशानां समूहः पाश्याः (स्त्री)
2. 'इनि' प्रत्ययान्ते - खलिनी (स्त्री)
3. 'कट्यच्' प्रत्ययान्ते - रथकट्या (स्त्री)
4. 'त्र' प्रत्ययान्ते - गोत्रा (स्त्री)

.... वैरमैथुनिकादिवुन् ।

वैर - வைர - விரோதத்திலும்,
मैथुनिक - மைதுநிக - திருமணத்திலும்,
आदि - ஆதி - என்றதால் दान, दण्ड

द्वन्द्वभावकर्मवाचको वुन् प्रत्ययान्तश्च स्त्रियां वर्तते ।

1. வீப்ஸையிலும் (திரும்பத்திரும்பக்கூறுதல்) 2. தண்டத்திலும், தானத்திலும் விதிக்கப்பட்ட वुन्-प्रत्ययान्त (வுந் ப்ரத்யயாந்த) சப்தங்கள் பெண்பாலில் வரும்.

உதாரணங்கள்-

विरोधे-अश्वमहिषयोर्विरोधः, अश्वमहिषिका, काकोलूकिका ।

विवाहे-अत्रिभरद्वाजयोर्विवाहः,अत्रिभरद्वाजिका, वसिष्टकुशिका ।

वीप्से-द्वौ द्वौ पादौददादि-द्विपादिकां ददादि, द्वि रातिकांददाति

दण्डे-द्वौ पादौ दण्डितः - द्विपदिकां दण्डितः, द्विशतिकां दण्डितः

दाने-द्वौपादौ व्यवसृजति-द्विपादिकां व्यवसृजति, द्विशतिकां व्यवसृजति

वुन् प्रत्ययं-वुञ् प्रत्यय த்துக்கும் उपलक्षण மாகையால் பெண்பால்.

स्त्रीभावादावनिक्तिण्ण्वुल्णच्ण्वुच्क्यब्यजिञ्ङ्निशाः ॥1486

स्त्रीभावादौ ஸ்ரத்திகாரத்தில் भावार्थ த்தில் விதியாகச் சொல்லப்பட்ட

1 2 3 4 5 6 7 8 9 10 11

अनि, क्तिन्, ण्वुल्, णच्, ण्वुच्, क्यप्, युच्, अङ्, अग्, नि-श् என்கிற ப்ரத்யயங்களை அந்தமாகவுடைய சப்தங்கள் பெண்பாலில் வரும். உதாரணங்கள்-

1. अनिप्रत्ययान्तो - अजननिः, अकरणिः ।
2. क्तिन् प्रत्ययान्तो - कृतिः, **भृतिः, हृतिः**
3. ण्वुल् प्रत्ययान्तो - प्रवाहिका, प्रच्छर्दिका
4. णच् प्रत्ययान्तो - व्यावक्रोणी, (अन्योन्यक्रोशनं वर्तत इत्यर्थः)
5. ण्वुच् प्रत्ययान्तो - शायिका
6. क्यप् प्रत्ययान्तो - व्रज्या, समज्या, सुत्येत्यादि
7. युच् प्रत्ययान्तो - आसना, कारणा, ग्रन्थना
8. अङ्प्रत्ययान्तो - त्रपा, भिदा, छिदा,
9. अप्रत्ययान्तो - पुत्रीया
10. निप्रत्ययान्तो - ग्लानिः, म्लानिः, हानिः
11. श्प्रत्ययान्तो - मृगया, इच्छा

1. அநிப்ரத்யயாந்தத்தில் - அஜநநி:, அகரணி:
2. க்தின் ப்ரத்யயாந்தத்தில்- க்ருதி:, ப்ருதி:, ஹ்ருதி:
3. ண்வுல் ப்ரத்யயாந்தத்தில் - ப்ரவாஹிகா, ப்ரச்சர்திகா
4. ணச் ப்ரத்யயாந்தத்தில் - வ்யாவக்ரோணீ
5. ண்வுச் ப்ரத்யயாந்தத்தில் - சாயிகா
6. க்யப் ப்ரத்யயாந்தத்தில்-வ்ரஜ்யா,ஸமஜ்யா,ஸுத்யேத்யாதி
7. யுச் ப்ரத்யயாந்தத்தில் - ஆஸநா, காரணா, க்ரந்தநா
8. அங் ப்ரத்யயாந்தத்தில் - த்ரபா, பிதா, சிதா
9. அப்ரத்யயாந்தத்தில் - புத்ரீயா
10. நி ப்ரத்யயாந்தத்தில் - க்லாநி:, ம்லாநி:, ஹாநி:
11. ச்(ஶ)ப்ரத்யயாந்தத்தில்- ம்ருகயா, இச்சா

उणादिषु निरूरीश्च ....

உணாதிகளில் நிப்ரத்யயாந்தத்தில் வரும் சொற்கள்.

उर्णादिषु निप्रत्ययान्तो– श्रेणिः, योनिः, द्रोणिः
अनि प्रत्ययान्तो – सरणिः
ऊकार प्रत्ययान्तो – खर्जूः, चमूः
ईकार प्रत्यायन्तो – तन्त्रीः, लक्ष्मीः

உணாதிஷு நிப்ரத்யயாந்தோ-ச்ரேணி:,யோநி:, த்ரோணி:
அநி ப்ரத்யயாந்தத்தில் - ஸரணி:
ஊகார ப்ரத்யயாந்தத்தில் - கர்ஜூ:, சமூ:
ஈகார ப்ரத்யயாந்தத்தில் - தந்த்ரீ, லக்ஷ்மீ:

मू. ङ्याबूङन्तं चलं स्थिरम् ।

ङी அதாவது ङीप्, ङीष्, ङीन् என்கிற ப்ரத்யயங்கள் आप् அதாவது टाप्, डाप्, चाप् என்னும் ப்ரத்யயங்கள் ஆகிய ஆறு ப்ரத்யயங்களுடன் ऊङ् என்னும் ப்ரத்யயமும் ஆக 7 ப்ரத்யயங்களையும் இறுதியாகவுடைய சப்தங்கள் चलं - विशेषनिघ्नங்களானதும் स्थिरं नित्यलिङ्गங்களானதும்

பெண்பாலாகும். இதற்குரிய உதாரணங்கள்-

ङीबन्तो - कर्त्री - ஙீ இறுதியில் - கார்த்திரீ

ङीषन्तो - गौरी - ஙீஷ் இறுதியில் - கௌரீ

ङीनन्तो - शार्ङ्गरवी - ஙீந் இறுதியில் - சார்ங்கரவீ

टाबन्तो - अजा - டாப் இறுதியில் - அஜா

डाबन्तो - सुराजा - [3]டாப் இறுதியில் - ஸுராஜா

चाबन्तो - कौमुदगन्ध्या - சாப் இறுதியில் - கௌமுதகந்த்யா

ऊङन्तो - वामोरूः - ஊங் இறுதியில் - வாமோரூ:

मू. तत्क्रीडायां प्रहरणं चेन्मौष्टा पाल्लवा णदिक् ॥ 1487

तत् அந்த, முஷ்டிபல்லவம் முதலியன क्रीडायां போரில் ஆயுதமானால் விதிக்கப்பட்ட 'ண' ப்ரத்யாந்த சப்தங்கள் பெண்பாலில் வரும். णतिक् என்பதால் दाण्डादि களும் கருதவேண்டும். உதாரணம்-

मुष्टिः - प्रहरणमस्यां क्रीडायां मौष्टौ

पल्लवः - प्रहरणमस्यां क्रीडायां इति पाल्लवा ।

முஷ்டி: - ப்ரஹரணமஸ்யாம் கிரீடாயாம்-மௌஷ்டொ

பல்லவ: - ப்ரஹரணமஸ்யாம் கிரீடாயாம்-இதி பால்லவா

ணதிக் என்பதால் தாண்டா: முதலியன.

मू. घञो ञः सा क्रियास्यां चेद् दाण्डपाता हि फाल्गुनी । श्यैनंपाता च मृगया तैलंपाता स्वधेति दिक् ॥ 1488

सा क्रिया *அந்த தாண்டபாதாதி க்ரியை,* अस्यां चेत् *இந்த பால் குணாதிகளில் உண்டானால் அந்த அர்த்தத்தில்* घञः घञन्त *த்தில் விதிக்கப்பட்ட* ञः - ञ प्रत्ययान्तं *பெண்பாலில் வரும். உதாரணம்:-*

यस्यां फाल्गुन्यां दण्डपातो वर्तते सा दाण्डपता । यस्यां मृगयायां श्येनानां पातो वर्तते सा श्यैनंपाता । यस्यां स्वधायां तिलानां पातो वर्तते सा तैलंपाता । दिग्ग्रहणमुदाहरणान्तरं प्रदर्शनार्थम् ॥

உதாரணம்: யஸ்யாம் பால்குண்யாம் தண்டபாதோ வர்த்ததே ஸா தண்டபாதா । யஸ்யாம் ம்ருகயாயாம் ஸ்யேநாநாம் பாதோ வர்த்ததே ஸா ஸ்யைநம் பாதா । யஸ்யாம் ஸ்வதாயாம் திலாநாம் பாதோ வர்த்ததே ஸா தைலம் பாதா । திக் க்ரஹணம் உதாஹரணாந்தரம் ப்ரதர்சனார்த்தம்.

மூ. स्त्रीस्यात् काचिन्मृणाल्यादिर्विवक्षापचये यदि ।

अल्पार्थत्தத்தில் विवक्षै யுண்டானால் ம்ருணாலீ சப்தம் (मृणालीशब्दे) முதலிய சில சப்தங்கள் பெண்பாலாகும். உதாரணங்கள்:-

अल्पं मृणालं मृणाली, अल्पोघटः घटी, இவை போல शस्त्री, विषाणी, पीठी, खर्जूरि போன்றவை அறிக. சிற்சில விஷயங் களில் अल्पोवृक्षः अल्पोवृक्षकः முதலியன பெண்பால் ஆகாது என்பர் சிலர். மிகவும் அற்பமான சொற்களைக்கூற வேண்டுமாயின் 'ம்ருணாலீ சப்தம்' போன்ற பிற சப்தங்கள் ஸ்த்ரீலிங்கம் (பெண்பாலாகும்). இதற்குரிய உதாரணங்கள்:-

அல்பம் ம்ருணாலம் ம்ருணாலீ; அல்போகட: கடீ; சத்ரீ, விஷாணீ, பீடீ, கர்ஜூரி போன்றவை. சிற்சில சொற்களில் அல்போவ்ருக்ஷ:, அல்போ வ்ருக்ஷக: முதலியன பெண்பால் ஆகாது என்று சிலர்.

இனி அகாரம் முதலிய எழுத்து வரிசையில் லிங்க(பால்) நிர்ணயம் செய்கிறார் கவி.

மூ. लङ्का शेफालिका टीका धातकी पञ्जिकाढकी ।। 1489

सिध्रका शारिका हिक्का प्राचिकोल्का पिपीलिका ।

तिन्दुकी कणिका भङ्गिः सुरङ्गासूचिमाढयः ।। 1490

पिच्छाविताण्डाकाकिण्यश्चूर्णिः शाणी द्रुणी दरत् ।
सातिः कन्या तथा सन्दी नाभी राजसभापि च ॥ 1491

झल्लरी चर्चरी पारी होरा लट्वा च सिध्मला ।
लाक्षा लिक्षा च गण्डूषा गृध्रसी चमसी मसी ॥ 1492

இதில் லங்கா என்ற சொல்(சப்தம்)லிலிருந்து மஸீ என்ற சொல் வரை **42** சப்தங்களைக் கூறியுள்ளார் கவி. இவை யனைத்துமே பெண்பால் சொற்களாகும். இதன் விவரம் கீழே:-

1. लङ्का (स्त्री)	லங்கா (பெ) ராவணனின் பட்டணம்
2. शेफालिका(स्त्री)	சேபாலிகா (பெ) நொச்சிலி
3. टीका (स्त्री)	டீகா (பெ) குறிப்புரை
4. धातकी (स्त्री)	தாதகீ (பெ) ஒருவகைப்பூ -இது உடலில் தாதுவை வளர்க்கும்
5. पञ्चिका (स्त्री)	பஞ்சிகா (பெ) ஒருவகை உரை நூல்
6. आढकी (स्त्री)	ஆடகீ (பெ) துவரை
7. सिध्रका (स्त्री)	ஸித்ரகா (பெ) வில்வமரம்
8. शारिका (स्त्री)	சாரிகா (பெ) அன்றில் பறவை
9. हिक्का (स्त्री)	ஹிக்கா (பெ) விக்கல்
10. प्राचिका (स्त्री)	ப்ராசிகா (பெ) காட்டு ஈ
11. उल्का (स्त्री)	உல்கா (பெ) கொன்றக்கொள்ளி
12. पिपीलिका(स्त्री)	பிபீலிகா (பெ) எறும்பு
13. तिन्दुकी (स्त्री)	திந்துகீ (பெ) தும்பைச்செடி
14. कणिका (स्त्री)	கணிகா (பெ) துளி, திவிலை
15. भङ्गिः (स्त्री)	பங்கி: (பெ)நடை, செயற்பாங்கு, ஆக்கம்
16. सुरङ्गा (स्त्री)	ஸுரங்கா (பெ) கன்னம்

17. सूचिः (स्त्री) ஸூசி: (பெ) ஊசி

18. माढिः (स्त्री) மாடி (பெ) தேச விசேஷம்

19. पिच्छा (स्त्री) பிச்சா (பெ) கஞ்சி; இலவம் பிசின்.

20. वितण्डावाद (स्त्री) விதண்டாவாதம் (பெ) தன்கொள்கைக்கு அடிப்படை இல்லாத வாதம்

21. काकिणी (स्त्री) காகிணீ (பெ) 4 உளுந்து எடை என்றும், பலத்தில் 4ல் ஒரு பங்கு ($^1/_4$) பலம் என்றும் இரு கருத்து உண்டு

22. चूर्णिः (स्त्री) சூர்ணி: (பெ) ஒரு வகை வாசனைப் பொருள் என்றும், ஒரு வகை உரைநடைப்பாட்டு (சூர்ணிகா)

23. शाणी (स्त्री) சாணி (பெ) சாணை

24. द्रुणी (स्त्री) த்ருணி (பெ) செவுட்டாம்பாம்பு (அ) ஆமை

25. दरत् (स्त्री) தரத் (பெ) விஷம் தோன்றும் இடம்

26. सातिः (स्त्री) ஸாதி: (பெ) தானம் (அ) கடுமையான வேதனை

27. कन्था (स्त्री) கந்தா (பெ) கந்தல் துணி கதா என்றும் பாடம் உண்டு

28. आसन्दी (स्त्री) ஆஸந்தீ (பெ) பாடை (சவ வாகநம்) கல்யாண மனை என்றும் சிலர்

29. नाभी (स्त्री) நாபீ (பெ)தொப்புள்

30. राजसभा (स्त्री) ராஜஸபா (பெ) அரசவை

31. झल्लरी (स्त्री) ஜல்லரீ (பெ) தாளவாத்ய விசேஷம்

32. चर्चरी (स्त्री) சர்ச்சரீ (பெ) நாட்டிய விசேஷம்

33. पारी (स्त्री) பாரீ (பெ) பால் கறக்கும் பானை

34. होरा (स्त्री) ஹோரா (பெ) லக்னத்தில் ஒரு பகுதி

35. लट्वा (स्त्री) லட்வா (பெ) ஊர்க்குருவி

36. सिध्मला (स्त्री) ஸித்மலா (பெ) தேமல், ஒரு வகை மீன் என்று சிலர்

37. लाक्षा (स्त्री) லாக்ஷா (பெ) செம்பஞ்சு குழம்பு (அல்லது) அரக்கு

38. लिक्षा (स्त्री) லிக்ஷா (பெ) ஈரு (பேனின் முதல் பருவம்)

39. गंडूषा (स्त्री) கண்டூஷா (பெ) கொப்பளித்தல்

40. गृध्रसी (स्त्री) க்ருத்ரஸீ (பெ) மார்பில் தோன்றும் வாதரோகம்

41. चमसी (स्त्री) சமஸீ (பெ) ஸோமபான பாத்ரம்

42. मसी (स्त्री) மஸீ (பெ) மை

।। इति स्त्रीलिङ्गविशेषप्रकरणम् ।।

अथ पुंलिङ्गविशेषविधिप्रकरणम् -

पुंस्त्वे सभेदानुचराः सपर्यायाः सुरासुराः ।

नपुंसकलिङ्ग शब्दங்களை எடுத்துரைக்கும் பகுதி வரை கூறப்படும் பெயர்ச்சொற்கள் (புல்லிங்க) ஆண்பால் சொற்கள் என்று தெரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக पुंस्त्वे என்ற சொல்லை பயன்படுத்தியுள்ளார்.

இந்த விசேஷ விதிகள், முதல் வர்க்கத்தில் கூறியுள்ள கீழே காணும் சொற்களுக்குப் பொருந்தாது. அவை அமரா நிர்ஜரா தேவர்கள் என்று கூறப்பட்ட பர்யாய பதங்கள்; தைத்ய தைதேயாதி பர்யாயங்களுடன் சேர்ந்திருக்கும் ஸுரஅஸுரா: என்று தேவர்கள், அஸுரர்கள் பற்றிய பர்யாய பதங்கள், அவர்களுக்குள் காணப்படும் விசேஷங்களான

இந்திரன், கந்தர்வரின் கூட்டத்தின் பெயர்கள், அவர்களை பின்பற்றும் ஹாஹா, ஹூஹூ, மாடர, பிங்கலாதிகளுடைய பெயர்களும், சண்டமுண்ட ப்ரஹஸ்தன் முதலிய பெயர்களிலும் ஆண்பாலில் வரும். இந்த பர்யாய சப்தங்கள் எதற்காவது லிங்க விசேஷமாய் வியாபித்திருக்கும் இடங்களிலும் இந்த விசேஷ விதி வராது.

स्वर्गयागाद्रिमेघाब्धिद्रुकालासिशराररय: ॥ 1493

करगण्डौष्ठदोर्दन्तकण्ठकेशनखस्तना: ।

சுவர்க்கம், வேள்வி, மலை, மேகம், கடல், மரம், காலம், கத்தி, அம்பு, எதிரி, கப்பம், கிரணம், கன்னம், மருந்து, கை, பற்கள், கழுத்து, மயிர், நகம், ஸ்தநம் ஆகிய 21 பெயற்சொற்களும் இவற்றின் உரிச் சொற்களும் (விசேஷணங்களும்) ஆண்பாலாகும். இதற்கு ஏதேனும் விசேஷ விதியாகக் கூறியிருந்தால் இந்த விதி அவற்றுக்கு வராது. இது எப்படி என்றால் முன்பு கூறியுள்ள (स्वर्ग) ஸ்வர்கம் முதலிய சொற்களான द्योदिवौ சப்தங்களும், மரங்களின் சிறப்புச் சொற்களான (हरिचन्दन शिंशुपा) ஹரிசந்தன சிம்சுபா சப்தங்களும், காலவிசேஷ வாசகங்களான (निथिप्रतिपदादि) நிதிப்ரதிபதாதிகளும், பாணங்கள் பற்றி சப்தங்களான इषु (இஷு) சப்தமும், கிரண வாசகங்களான दीधित्यादि (தீதித்யாதி)களும், உதடு பற்றிய சொற்களான दशनवास (தசநவாஸ) சப்தமும், கைகளின் சப்தங்களான भुजबाहुக்களும், பற்கள் பற்றிய விசேஷ சொற்களான दंष्ट्राशीर्विषाण (தம்ஷ்ட்ராசீர்விஷாண) சப்தங்களும், தலைமுடிகளின் சிறப்புக்களான जटा,सटा (ஜடா, ஸடா) சப்தங்களும், நக வாசங்களான नखनखर சப்தங்களும் (ஏற்கனவே கூறியுள்ளபடி) விசேஷ விதியையுடையவை. ஆகவே இங்கு கூறப்பட்டுள்ள இந்த விதி இவற்றுக்கு வராது.

अह्नाहान्ताः ....

अह्नान्त ங்களான (அஹ்ந்ந என்பதை இறுதியாக உடைய) பூர்வாந்ஹ-அபராந்ஹ-மத்யாந்ஹ முதலிய சப்தங்கள் ஆண்பால். अहान्ता (அஹாந்த)ங்கள द्व्यहः, त्र्यहः, पञ्चाहः முதலிய சப்தங்கள் ஆண்பால்.

............क्ष्वेडभेदा ....

விதி விசேஷ வாசகங்கள் புல்லிங்கம். உதாஹரணம்- सौराष्ट्रिकः । शौक्लिकेयः । ब्रह्मपुत्रः । प्रदीपनः முதலியன. काकोलः, कालकूट முதலிய சொற்களுக்கு விசேஷ விதி இருப்பதால் இதற்கும் இந்த விதி வராது.

.....................रात्रान्ताः प्रागसंख्यकाः ॥ 1494

ராத்ரீ (இரவு) என்ற சொல்லை இறுதியாகவுடைய சப்தங்கள் ஆண்பாலாகும். உதாரணம்- पूर्वरात्र, अपररात्र, अर्धरात्र முதலிய சொற்கள். ராத்ராந்தமான ஸமாஹாரத்தில் अहोरात्र என்ற ஒரு சொல்லுண்டு. अतिरात्रः என்ற திக்கில் अन्यपदार्थभिन्नलिङ्ग மானாலும் அது புல்லிங்கம்தான். எண்ணிக்கையை முன் பதமாகக் கொண்டுவரும் சொல்லானால் गणरात्र, पञ्चरात्र இவை நபும்ஸக லிங்கமாகும்.

श्रीवेष्टाद्याश्च निर्यासा ....

श्रीवेष्टा, श्रीवास, सरलद्रव முதலின (ஸ்ரீவேஷ்டா, ஸ்ரீவாஸ, ஸரலத்ரவ) மரப்பிசின் பெயர்கள். இவை ஆண்பாலாகும்.

........................असन्नन्ता अबाधिताः ।

अबाधिताः- இந்த சிறப்பு விதிகளால் பாதிக்கப்படாத असन्नन्ताः (அஸ்-ஐ இறுதியில் கொண்ட சொற்கள்) உதாரணம் : अङ्गीरस्, पुरोधस् (அங்கீரஸ், புரோதஸ்) முதலான

அஸந்தங்களும் सुपर्वन्, प्लीहन् (ஸுபர்வந், ப்லீஹந்) முதலான अन्नन्त (அந்-ஐ இறுதியாகக்கொண்ட சொற்களும்) ங்களும் (புல்லிங்கம்) ஆண்பாலில் வரும்.

'பாதிக்கப்படாது' என்பதால் यशस्, पयस्,नामन् என்ற இடங்களில் இந்த விதி வராது.

कशेरुजतुवस्तूनि हित्वा तुरुविरामकाः ॥ 1495

कशेरु, जतु, वस्तु (கசேரு, ஜது, வஸ்து) என்ற சொற்களை விட்டு விட்டு तु,रु து என்கிற எழுத்தையும், ரு என்கிற எழுத்தையும் இறுதியாகக்கொண்ட சொற்கள்(சப்தங்கள்) புல்லிங்கமாகும். உதாரணம்:-

तु - हेतु, सेतु (ஹேது,ஸேது) முதலான சொற்கள்.

रु - चरु, गरु (சரு, கரு) முதலான சொற்கள்

இது எல்லா இடத்திற்கும் வருவதில்லை.

कशेरु, जतु, वस्तु ஆகிய சொற்க (கசேரு, ஜது, வஸ்து) ளாயின் நபும்ஸகலிங்கமாகும். இது ஒரு உதாரணம். (உபலக்ஷணம்) ஆகையால் दारु, स्मश्रु, तश्रु, कुस्तुंबरु, मस्तु शब्द ங்களும் (தாரு, ஸ்மஸ்ரு, தச்ரு, குஸ்தும்பரு, மஸ்து போன்ற சொற்களும்) நபும்ஸக சப்தங்களாகும்.

कषणभमरोपान्ता यद्यदन्ता अमी अथ ।
पथनयसटोपान्ता ....

क - ष - ण - भ - म - र - प - थ - न - य - स - ट (க-ஷ-ண-ப-ம-ர-ப-த-ந-ய-ஸ-ட) இந்த பன்னிரண்டு எழுத்துக்களும் உபாந்தங்களாகும். (கடைசீ எழுத்துக்கு முன் எழுத்து) கடைசீ எழுத்தாகவோ அதற்கு முன் எழுத்தாகவோ வந்தாலும் அகாரத்தால் முடிந்தாலும் அந்த சப்தங்கள் ஆண்பால் ஆகும். உதாரணம்.

क (க) - कर्कः, स्फटिकः, नाकः, सायकः, श्लोकः, लोकः

ष (ஷ) - वृषः, निकषः, रोषः, शोषः, पक्षः, कक्षः
ण: (ண) - गणः, गुणः, कोणः, बाणः, फणः, गुणः
भ (ப) - कुम्भः, स्तम्भः, दम्भः, गर्भः, कलभः
म (ம) - ग्रामः, व्यामः, वामः
र (ர) - हरः, सारः,
प (ப) - धूपः, सूपः
थ (த) - अर्थः, शपथः
न (ந) - स्तनः, जनः
य (ய) - कुलायः, तन्तुवायः
स (ஸ) - रसः, दासः
ट (ட) - घटः, वटः

க - கர்க:, ஸ்படிக:, நாக:, ஸாயக:, ச்லோக:, லோக:
ஷ - வ்ருஷ:, நிகஷ:, ரோஷ: சோஷ:, பக்ஷ:, கக்ஷ:
ண:- கண:, குண:, கோண:, பாண:, பண:, குண:
[4]ப:- கும்ப:, ஸ்தம்ப:, தம்ப:, கர்ப:, கலப:
ம - க்ராம:, வ்யாம:, வாம:
ர - ஹர:, ஸார:
ப - தூப:, ஸூப:
த - அர்த:, சபத:
ந - ஸ்தந:, ஜந:
ய - குலாய:, தந்துவாய:
ஸ - ரஸ:, தாஸ:
ட - கட:, வட:

..........................गोत्राख्याश्चरणाह्वयाः ॥ 1496

गार्ग्यः, वात्स्यः, भारद्वाजः, हारिदः *(கார்க்ய:,வாத்ஸ்ய:, பாரத்வாஜ:, ஹாரித:)* முதலிய கோத்திர பதத்தை சொல்லும் பெயர்களும் புல்லிங்கமாகும். இதைப்போலவே வேத சாகைகளின் பெயர்களும் புல்லிங்கமாகும்.

नाम्न्यकर्तरि भावे च घञजब्नङ्णघाथुचः ।

नाम्नि-संज्ञायां अकर्तरि - कर्तृत्त्वव्यतिरिक्तकारके, भावे च धात्वर्थमात्रे च முறைப்படி விதிக்கப்பட்ட घञ् - अच् - अप् - नञ् - ण - घ - अघुप् என்கிற இந்த ஏழு ப்ரத்யயங்களை இறுதியாகக் கொண்ட சப்தங்கள் விசேஷ விதி இல்லாத இடங்களில் புல்லிங்கமாக வரும். உதாரணங்கள்:-

घञ् - पादः, रोगः, वेशः
कर्तृव्यतिरिक्तकारके - घञ् क्कु प्रक्रिय इति प्रकारः । प्रसीदन्त्यस्मिन्निति- प्रासादः । रज्यते अनेनेति रागः ।।

भावार्थे - घञ् - त्यागः, भोगः
अच् प्रत्ययान्ता - नयः, जयः, चयः,
अप् प्रत्ययान्ता- करः-गरः-लवः
नञ् प्रत्ययान्ता- यज्ञः-यत्नः-यत्तः
ण प्रत्ययान्ता - न्यादः
घ प्रत्ययान्ता - उरच्छदः, दन्तच्छदः
अथुच् प्रत्ययान्ता- वमथुः, वेपथुः

கஞ் - பாத:, ரோக:, வேச:
கர்த்ரு வ்யதிரிக்த காரகத்தில் - கஞ்க்கு - ப்ரக்ரிய இதி ப்ரகார:। ப்ரஸீதந்த்ய ஸ்மிந்நிதி - ப்ராஸாத: । ரஜ்யதே அநேநேதி ராக: ।

பாவார்த்தத்தில் - घञ् க்கு - த்யாக:, போக:
அச் ப்ரத்யயாந்தத்தில் - நய:, ஜய:, சய:
அப் ப்ரத்யயாந்தத்தில் - கர:, ³கர:, லவ:
நஞ் ப்ரத்யயாந்தத்தில் - யக்ஞ:, யத்ந:, யத்த:
ண ப்ரத்யயயாந்தத்தில் - ந்யாத:
க ப்ரத்யயாந்தத்தில் - உரச்சத:, தந்தச்சத:
அதுச் ப்ரயாந்தத்தில்-வமது:, வேபது:

ल्युः कर्तरी......................

कर्तरी - கார்த்ரு அர்த்தத்தில் விதிக்கப்பட்ட ல்யு: (ल्युः) ப்ரத்யயங்களின் அந்தங்களான नन्दनः, रमणः, दहनः (நந்தந:, ரமண:, தஹந:) இவை முதலான சப்தங்கள் புல்லிங்கமாகும்.

.... मनिज्भावे ....

भावे - பாவார்த்தத்தில் விதிக்கப்பட்ட इमनिच् - இமநிச் ப்ரத்யயாந்தங்கள் புல்லிங்கம். உதாரணம்:- प्रथिमन्, गरिमन्, लघिमन् முதலிய (ப்ரதிமந், கரிமந், லகிமந்)

.... को घोः किः प्रादितोऽन्यतः ।। 1497

कः பாவார்த்தத்தில் விதி க்கப்பட்ட, कः प्रत्ययान्त ங்கள் புல்லிங்கமாகும். உதாரணங்கள்:- आखूत्थः, श्येनोत्थः (ஆகூத்த:, ச்யேநோத்த:) முதலிய சப்தங்களும், प्रादितः- प्र-परा (ப்ராதித:-ப்ர-பரா) என்கின்ற உபஸர்கத்தைக் காட்டிலும் வேறான सुबन्त (ஸுபந்த)த்தை கர்ம பதமாகவுடைய घोः - घुसंज्ञक धातु (கோ:-குஸம்ஞக தாது) வின் பேரில் अधिकरणार्थ (அதிகரணார்த்த)த்தில் विधि (விதி)க்கப்பட்ட किः - किप्रत्यायान्त ங்களான अम्बुधिः, इक्षुधिः (அம்புதி:, இக்ஷுதி:) என்கின்ற शब्द (சப்த)ங்களும் புல்லிங்கமாகும்.

द्वन्द्वेऽश्वबडबावश्वबडवानसमाहृते ।

समाहारव्यतिरिक्तमान (ஸமாஹார வ்யதிரிக்தமான) अश्वबडवा (அச்வபடவா) என்னும் द्वन्द्वसमासरूप (த்வந்த்வ ஸமாஸ ரூப) மான சப்தம் புல்லிங்கமாகும். இவ்விடத்தில் पूर्ववदश्वबडबौ (பூர்வவதச்வ படவௌ) என்கிற ஸூத்திரத்தில்

द्विवचनं (த்விவசனம்) விவக்ஷிதமாகமாட்டாதென்று தெரிவதற்காக अश्ववडवाः (அச்வபடவா:) என்று बहुवचन த்தில் (பன்மையாகக்) கூறியுள்ளார். (समाहार) இது ஸமாஹாரத்தில் நபும்ஸகலிங்கம்.

कान्तः सूर्येन्दुपर्याय पूर्वोऽयः पूर्वकोऽपि च ॥ 1498

सूर्यपर्याय शब्द ங்களும் चन्द्रपर्यायशब्दங்களும் अयः शब्दமும் पूर्वङ्ग ளாகவுடைய कान्तशब्दं ஆகியவை புல்லிங்கமாகும்.

(ஸூர்யபர்யாய சப்தங்களும், சந்த்ரபர்யாய சப்தங்களும், அய: சப்தமும், பூர்வங்களாகவுடைய காந்த சப்தமும் ஆண்பாலாகும்)

இனிமேல் சில ஆண்பால் சொற்கள் அகரவரிசையில் தொகுத்துக் கூறுகிறார்.

वटकश्चानुवाकश्च रल्लकश्च कुडङ्गकः ।
पुङ्खो न्यूङ्खः समुद्गश्च विटपट्टधटाः खटः ॥ 1499
कोट्टारघट्टहट्टाश्च पिण्डगोण्डपिचण्डवत् ।
गडुः करण्डो लगुडो वरण्डश्च किणो घुणः ॥ 1500
दृतिसीमन्तहरिता रोमन्थोद्गीथबुद्बुदाः ।
कासमर्दोऽर्बुदः कुन्दः फेनस्तूपौ सयूपकौ ॥ 1501
आतपः क्षत्रिये नाभिः कणयक्षुरकेदराः ।
पूरक्षुरप्रचुक्राश्च गोलहिङ्गुलपुद्गलाः ॥ 1502
वेतालमल्लभल्लाश्च पुरोडाशोऽपि पट्टिसः ।
कुल्माषो रभसश्चैव सकटाहः पतद्ग्रहः ॥ 1503

॥ इति पुल्लिङ्गशेषः ॥

1. वटकः (पुं)- வடக: (பு) வடாம்/தின்பண்டம்

2. अनुवाकः (पुं)- அநுவாக: (பு) வேதங்களின் கூட்டமைப்பு-ருத்ரானுவாகம் என்பதுபோல

3. रल्लकः (पुं)- ரல்லக: (பு) கம்பளியில் ஒருவகை

4. कुडङ्गः (पुं) - குடங்க: (பு) புதர்

5. पुङ्गः (पुं)- புங்க: (பு) பாணத்தின் நுணி

6. न्यूङ्खः (पुं) - ந்யூங்க: (பு) நிரந்தரமாய் உச்சரித்த ஆறு ஓங்காரங்கள்

7. समुद्गः (पुं)- ஸமுத்க: (பு) ஸம்புடம்

8. विटः (पुं)- விட: (பு) காமுகன்

9. पट्टः (पुं)- பட்ட: (பு) நெற்றிச்சுட்டி

10. घटः (पुं)- தட: (பு) திராசு

11. खटः (पुं)- கட: (பு) கோரைப்புல்

12. कोट्टः (पुं)- கோட்ட: (பு) கோட்டை

13. अरघट्टः (पुं)- அரகட்ட: (பு) பெரிய கிணறு

14. हट्टः (पुं)- ஹட்ட: (பு) கடைத்தெரு

15. पिण्डः (पुं)- பிண்ட: (பு) புல்

16. गोण्डः (पुं)- கொண்ட: (பு) தேசவிசேஷம்

17. पिचण्डः (पुं)- பிசண்ட: (பு) வயிறு

18. गडुः (पुं)- கடு: (பு) ஒருவகை மாமிசம்

19. करण्डः (पुं)- கரண்ட: (பு) சிறு பெட்டி, கூடை

20. लगुडः (पुं)- லகுட: (பு) தடி(கம்பு)

21. वरण्डः (पुं)- வரண்ட: (பு) முகரோகம்

22. किणः (पुं)- கிண: (பு) புண், காயம்

23. घुणः (पुं) - குண: (பு) மரத்தைத் துளைக்கும் புழு

24. दृतिः (पुं) - த்ருதி: (பு) துருத்தி (தோற்பை)

25. सीमन्तः (पुं) - ஸீமந்த: (பு) வகுடு

26. हरितः (पुं) - ஹரித: (பு) பக்ஷிவிசேஷம்

27. रोमन्तः (पुं) - ரோமந்த:(பு) (மாடு/ஆடு) ஆசைபோடுதல்

28. उद्गीथः (पुं) - உத்கீத: (பு) ஸாமப்ரணவம்

29. बुद्बुदः (पुं) - புத்புத: (பு) நீர்க்குமிழி

30. कासमर्दः (पुं) - காஸமர்த:(பு)திண்ணை

31. अर्बुदः (पुं) - அர்புத: (பு) வீக்கம், கொழுப்புக் கட்டி, மலைவிசேஷம்

32. कुन्दः (पुं) - குந்த: (பு) குருக்கத்திச்செடி

33. फेनः (पुं) - பேந: (பு) நுரை

34. स्तूपः (पुं) - ஸ்தூப: (பு) உயர்ந்த ஸ்தூபி

35. यूपः (पुं) - யூப: (பு) யாகப்பசு கட்டுகிற தூண்/கம்பம்

36. आतपः (पुं) - ஆதப: (பு) வெய்யில்/நாபி

37. नाभिः (पुं) - நாபி: (பு)க்ஷத்ரிய நாபி அரசன்

38. कणयः (पुं) - கணய: (பு) குந்தாலி/போர் ஆயுதத்தில் ஒரு வகை

39. क्षुरः (पुं) - க்ஷுர: (பு) கத்தி(க்ஷவரக்கத்தி)

40. केदरः (पुं) - கேதர: (பு) ஒருவகை மரம்

41. पूरः (पुं) - பூர: (பு) வெள்ளம்

42. क्षुरप्रः (पुं) - க்ஷுரப்ர: (பு) அம்பு விசேஷம்

43. गोलः (पुं) - கோல: (பு) மண்ணுருண்டை/ பூகோளம்,பூமி உருண்டை போல

44. हिङ्गुलः (पुं) - ஹிங்குல: (பு) குங்கலீயம்

45. पुद्गलः (पुं) - புத்கல: (பு) ஜைன மதத்தில் ஜீவனும்-பரமாணுவும்

46. वेतालः (पुं) - வேதால: (பு) வேதாளம்- பிசாசில் ஒரு வகை

47. मल्लः (पुं) - மல்ல: (பு) மல்லன் (குஸ்தி போடுபவன்)

48. भल्लः (पुं) - பல்ல: (பு) ஆயுத விசேஷம்

49. पुरोडाशः (पुं) - புரோடாச: (பு) மாவினால் செய்த யாக ஹோம திரவ்யம்

50. पट्टसः (पुं) - பட்டஸ: (பு) ஆயுத விசேஷம்

51. कुल्माषः (पुं) - குல்மாஷ: (பு) பாதியாக வெந்த பருப்பு,கோதுமை மாவு கலந்த பொருள்

52. रभसः (पुं) - ரபஸ: (பு) பரபரப்பு

53. कटाहः (पुं) - கடாஹ: (பு) கடாய், வாணலி

54. पतद्ग्रहः (पुं) - பதத்க்ரஹ: (பு) தாம்பூல எச்சில் துப்பும் பாத்திரம்(எச்சில்கோளம்பி)

।। इति पुंलिङ्गविशेषः ।।

अथ नपुंसकलिङ्गशेषप्रकरणम् -

द्विहीनेऽन्यच्चखारण्यपर्णश्वभ्रहिमोदकम् ।
शीतोष्णमांसरुधिर मुखाक्षिद्रविणं बलम् ।। 1504

பெண்பால், ஆண்பால் ஆகியவற்றைக் காட்டிலும் வேறான, முன்னே சொல்லப்போகிற சப்த ரூபங்களெல்லாம் நபும்ஸகலிங்கத்திலும் வரும். ख - ஆகாசமும் इन्द्रिय (இந்திரியமும்) இந்த இரண்டு பெயர்களும் வந்த இடங்களில் விசேஷத்தின் பெயர்களும், விசேஷ விதியானால் பாதிக்காது.

*भयामृतशकृद्वस्त्रचापाभरणलाञ्छनम् ।
दार्वौषधमृधापत्यहृदयोदरकाकुदम् ।। 1505

पत्तनाजिन श्रृङ्गार्मद्वारबर्होडुमानसम् ।
ध्वान्तं चाव्यक्तलिङ्गस्य भणितौ यत्प्रयुज्यते ।। 1506

